PRESS NOTE

FORMERLY INSPECTOR OF POLICE, CCB, CHENNAI WAS CONVICTED FOR 5 YEARS of RIGOROUS IMPRISONMENT FOR RECEIVING Rs.2,00,000/- AS BRIBE.

The Convicted accused Thiru.D.C.Ruskin was working as Inspector of Police, XIII Team in CCB, Chennai from 01.11.2007 to 17.12.2008.

Tr.T.S.Abineshababu, residing at Anna Nagar lodged a complaint that Tr. Ruskin, Inspector of Police, CCB, Chennai demanded Rs.2,00,000/- as bribe to drop further action and to close the cases as civil in nature in CCB Cr.No.341/2008 and Cr.No.767/2008 which were registered against the complainant Tr.T.S.Abineshababu and others.

Followed by this, the Complainant had preferred a complaint against Thiru.D.C.Ruskin and Tr.S.Mohan, Head Constable 7620 at DVAC on 16.12.2008 and based on a case in DVAC Hqrs Cr.No 12/2008/AC/Hqrs was registered and trap was laid. On 17.12.2008 at 20.05hrs Tr. Ruskin, Inspector of police reiterated his earlier demand and directed the complainant Tr.T.S.Abineshababu to hand over the bribe money to Tr.S.Mohan, Head Constable 7620 who accepted Rs.2,00,000/- from the complainant. Thus both the accused committed an offence punishable under section 7 & 13 (1)(d) of Prevention of Corruption Act.1988.

After completion of investigation, Charge Sheet was laid before the Hon'ble Special Court for cases under the Prevention of Corruption Act, Chennai on 05.03.2010. Today (27.06.2025) the Hon'ble Special Judge,

Court for cases under the Prevention of Corruption Act Chennai pronounced the Judgment in this case by convicting the accused Tr.D.C.Ruskin to undergo Rigorous Imprisonment for 4 years and shall pay a fine of Rs.1,00,000/-, in default to undergo 3 month Simple Imprisonment for the offence committed u/s 7 of Prevention of Corruption Act, 1988 and to undergo Imprisonment for 5 years and shall pay a fine of Rs.1,00,000/- in default to undergo 3 month Simple Imprisonment for the offence committed u/s 13 (2) r/w 13 (1) (d) of Prevention of Corruption Act, 1988 and to run the sentences concurrently.

பத்திரிக்கை செய்தி

லஞ்சம் பெற்ற குற்றத்திற்காக முன்னாள் காவல் ஆய்வாளர், திரு.D.C.ரஸ்கின், சென்னை மத்திய குற்றப்பிரிவு, சென்னை ஐந்து ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து, சென்னை சிறப்பு நீதிமன்றம் தீர்ப்புரை.

லஞ்சம் பெற்ற குற்றத்திற்காக தண்டனை பெற்றுள்ள திரு.D.C.ரஸ்கின் அவர்கள் காவல் ஆய்வாளராக சென்னை மத்திய குற்றப்பிரிவில் 01.11.2007 முதல் 17.12.2008 வரை பணிபுரிந்துள்ளார்.

எதிரி-1 திரு.ரஸ்கின் காவல் ஆய்வாளராக சென்னை மத்திய குற்றப்பிரிவில் பணிபுரிந்தபோது சென்னை அண்ணாநகரை சேர்ந்த புகார்தாரர் அபினேஷ்பாபு மற்றும் சிலர் மீது பதிவுசெய்யப்பட்ட வழக்கில் புகார்தாரர் மீது எவ்வித மேல்நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கவும், மற்றும் இவ்வழக்கை உரிமை இயல் வழக்காக கருதி நடவடிக்கை எடுக்காமல் இருக்கவும் கையூட்டாக ரூ.2,00,000/- கேட்டுள்ளார்.

புகார்தாரர் அபினேஷ்பாபு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாத காரணத்தினால் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வுக் குழுவில் 16.12.2008 அன்று புகார் கொடுத்ததின் அடிப்படையில் திரு,ரஸ்கின், காவல் ஆய்வாளர் மற்றும் அவருக்கு உதவியாக இருந்த திரு.மோகன், தலைமை காவலர் 7620 ஆகியோர் மீது குற்ற எண்.12/2008ல் வழக்கு பதிவு செய்து எதிரிகள் மீது பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 17.12.2008 அன்று மதியம் 14.20 மணிக்கு எதிரி-1 திரு.ரஸ்கின் அறிவுரைப்படி எதிரி-2 திரு.மோகன் லஞ்சப்பணம் ரூ.2,00,000/- கேட்டு பெற்றுக்கொண்டார்.

இவ்வழக்கில் 06.11.2013 அன்று சென்னை சிறப்பு நீதிமன்றம், நீதித்துறை நடுவர்/ ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. எதிரி திரு.ரஸ்கின் மீது சட்டப்பிரிவு 7 of Prevention of Corruption Act, 1988 கீழ் 4 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும், ரூ.1,00,000/- அபராதமும், அபராதம் கட்டத் தவறினால் 3 மாதகாலம் மெய்க்காவல் சிறைத்தண்டனையும் மற்றும் u/s 13(2) r/w 13(1)(d) of Prevention of Corruption Act,1988-ன் படி 5 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும், ரூ.1,00,000/- அபராதமும், அபராதம் கட்டத் தவறினால் 3 மாதகாலம் மெய்க்காவல் சிறைத்தண்டனையும் விதித்து இன்று 27.06.2025 இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது.